கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் அறிவியலில் அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு குறித்த பயிற்சி

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியலில் அறிவுசார் சொத்துரிமைகள் , வடிவமைப்புகள் மற்றும் பதிப்புரிமைப் பாதுகாப்பு குறித்த இரண்டு நாள் பயிலரங்கம் பல்கலைக்கழக அண்ணா அரங்கில் முதுநிலை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 19.02.2024 (திங்கள்கிழமை) அன்று நடைபெற்ற தொடக்கவிழாவில், முதுநிலை மாணவர்கள் காப்புரிமைப் பி ரிவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் என் . நடராஜன் வரவேற்பு உரையாற்றினார் மற் றும் முதுநிலை கல்வி த் துறை தலைவர் முனைவர் என் . செந்தில் மாணவர்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார்.

திருமதி பிமி, காப்புரிமை மற்றும் வடிவமைப்பு துணைக்கட்டுப்பாட்டாளர் சென்னை , தனது உரையில், மாணவர்கள் தங்கள் புதுமையான கண்டுபிடிப்புகளை மதிப்பிடுவதற்கு இலவச இணையதளம் பயன்படுத்துவது மற்றும் கண்டு பிடிப்பு படிவத்தை எவ்வாறு சரியாக தயாரிப்பது என்பதை அவர்களுக்கு வி ளக்கினார். திருமதி வெ. கிரிஜா, காப்புரிமை வழக்கறிஞர் மற்றும் IPaatEntiti IP இன் நிறுவனர், தன் உரையில் இந்தியாவில் உள்ள அறிவுசார் சொத்துரிமைகளின் அம்சங்களை விளக்கி, பல்வேறு வகையான உரிமைகளை பற்றி மாணவர்களின் மத்தியில் உரையாற்றினார்.

முனைவர் வெ. கீதாலட்சுமி துணைவேந்தர் அவர்கள் மாணவர்களின் ஆராய்ச்சியின் மூலம் புதிய தொழில்நுட்பத்திற்கு காப்புரிமை பெறுதல் மற்றும் அதை பாதுகாத்தலின் முக்கியதுவத்தை பற்றி சிறப்புரை ஆற்றினார். இணைப் பேராசிரியர் முனைவர் கணேசன் நன்றி கூறினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்